# அயலகப் பெண் படைப்பாளர் புதினங்களில் வாழ்வியல்சிக்கல்கள்.

முனைவர்.இலெ.பேபி, இணைபேராசிரியர் & தமிழ்த்துறைத்தலைவர்
அண்ணாஆதர்ஷ்மகளிர்கல்லூரி, சென்னை.
babyl@annaadarsh.edu.in

3

**ஆய்வுநோக்கம்.**
அயலகப் பெண் படைப்பாளர்களின்படைப்புகளில்வாழ்வியல்சிக்கல்களைஆராய்வதேஇவ்வாய்வின் நோக்கமாக கொள்ளலாம்.

**ஆய்வுச்சுருக்கம்.**
சங்க காலம் தொட்டு தமிழர் அயல்நாடுகளுக்குபுலம்பெயர்ந்து உள்ளனர் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் அயல்நாடுகள் ஈழம் மலேசியா சிங்கப்பூர் கனடா போன்றவை ஆகும் ஏதேனும் ஒரு காரணத்திற்காகஅயல்நாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்கள் அங்கேயே வாழ தலைப்பட்டனர் அவர்கள் படிக்கின்றஇலக்கியங்களேஅயலக தமிழ் இலக்கியங்கள் என்பர் அழகர் தமிழ் இலக்கியத்தில் புதினம் முக்கியமானதாகும் இவர்களுக்கு என்று தனித்த இலக்கியப் போக்கு கிடையாது தமிழக படைப்புகளேஅயலகபடைப்புகளுக்குமுன்னோடியாகவிளங்கியது என்று கொள்ளலாம் அயல்நாட்டில்வசிக்கின்ற பெண் படைப்பாளர்கள்தம் படைப்புகளில்படைத்துள்ளவாழ்வியல்சிக்கல்களைபண்பாட்டுச் சிக்கல்கள் சமூக சிக்கல்கள் போன்ற தளங்களில் ஆராயும் முகமாகஇக்கட்டுரைஅமைந்துள்ளது.

பல்வேறு நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்து புதிய நாட்டில் வாழத் தலைப்படும் மக்கள் அப்பகுதியின் சூழலுக்கு ஏற்ப தம்மை பழகிக் கொள்ள மிகப்பெரிய போராட்டங்களை நடத்த வேண்டி இருக்கிறது. அயல்நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் இப்பபாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர் என்பதனை அயலகப் பெண் படைப்பாளர்கள் தம்புதினங்களில்பதிவு செய்துள்ளனர். 21ஆம்நூற்றாண்டில் மனித வாழ்க்கை எல்லா நிலைகளிலும் மாறிவிட்டது. மனித வாழ்க்கையில் இருந்துதான்படைப்பாளி தன் படைப்பிற்கு தேவையான பாடுபொருளை பெறுகின்றார் மனித வாழ்க்கை சிக்கல் நிறைந்துள்ளதாக காணப்படுகிறது.இவ்வாழ்வியல்சிக்கல்களை அயலக பெண் படைப்பாளரான ஜெயந்தி சங்கர் தம் புதினத்தில் எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பதனை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

ஜெயந்தி சங்கர் இவர் மதுரையை பூர்வீகமாகக் கொண்டவர். தந்தை நாகசாமி ஐயர். தாயார் கல்யாணி இல்லத்தரசி தந்தையின் பணி நிமித்தம் காரணமாக மாற்றலாகி இந்தியா முழுவதும் உள்ள பல மாநிலங்களுக்கு சென்றதால் பல மொழிகளையும் பல கலாச்சாரங்களையும் அறிந்தவர். கணவரின் பணி நிமித்தம் காரணமாக ஆம் ஆண்டு சிங்கப்பூருக்கு 1990புலம் பெயர்ந்தவர்.

சிறந்த கதைசொல்லி, கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், மனித வாழ்க்கையின் நுட்பங்களைபுரிந்து விவாதமாக்கும் மானுட நேயமிக்கவர். ஏறக்குறைய 25 ஆண்டுகளாக 25க்கும் மேற்பட்ட நூல்களையும்,க்கும் மேற்பட்ட பரிசுகளையும் பெற்றவர்50 . இவரின் எழுத்துக்களில் தமிழர்களின் புலம் பெயர் வாழ்வும் வலியும் பிரதானமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழர் பண்பாடு மரபும் சிங்கப்பூர் பண்பாடு நவீனமும் தமிழர்கள் வாழ்வில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன என்பதனை புனைவுகளாக்கி வருகின்றார். மேலும் தன்னைச் சுற்றி இயங்கும் மனிதர்களின்

வாழ்வியலை பெண்மையை கதைக்களாக்கி படைத்து வருபவர்

இவர் ஏழுசிறுகதை தொகுப்பையும், ஐந்து புதினங்களையும் ,ஒரு குரு நாவல் தொகுப்பையும், ஆறு கட்டுரை தொகுப்புகளையும், எண்ணற்ற மொழிபெயர்ப்பு, வாழ்க்கை வரலாறு நூல், சிறுமை இலக்கியம் போன்ற பல்வேறு தளங்களில் படைப்புகளை படைத்து வருபவர்.

- வாழ்ந்து பார்க்கலாம் வா
- நெய்தல்
- மனப்பிரிகை
- குவியம்
- துரிதலையும் தினைகள்

என்ற அவரது புதினங்களை உள்ளடக்கி தொகுப்பாக ஜெயந்தி சங்கர் புதினங்கள் என்ற நூல் காவியா வெளியீடாக ஆம் ஆண்டு வெளிவந்தது 2014.இப் புதினங்கள் அனைத்தும் சிங்கப்பூரை பின்னணியாக கொண்டு படைக்கப்பட்டுள்ளதால் அந்நாட்டு தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள வாழ்வியல் சிக்கல்களை பின்வருமாறு இனம் காணுகிறது.

**வாழ்ந்து பார்க்கலாம் வா(2006):**

ஜெயந்தி சங்கரின் முதல் புதினம் இதுஇந்திய சமூக அமைப்பில். குடும்பம் என்ற கட்டமைப்பு தரும் மகிழ்ச்சியை சொல்லும் படைப்புகளை அதிகம் குடும்பம் தரும் சிக்கல்களையும், வலிகளையும், வேதனைகளையும் வெளிப்படையாக சொல்லும் படைப்புகள் இல்லை இப்புதினம்பெற்றோர் தம் பிள்ளைகளின் சுதந்திரத்தை தடுப்பவர்களாகவும் அடக்குபவர்களாகவும் விளங்குகின்றனர். தங்களின் விருப்பங்களை திணிக்கவும் முயற்சி செய்கின்றனர். பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளையானால் இந்த கட்டாய திணிப்புகளும் அடக்கு முறைகளும் அதிகமாகும்.இக்கதையின் நாயகியான உமா பிராமண பெண் கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்த வசந்தத்தை விரும்புகிறாள். காதலுக்கு பெற்றோரிடம் இருந்து எதிர்ப்பு வருகிறது. வசந்தை மிரட்டி பெங்களூருக்கு அனுப்புகிறார்கள். உமாவிற்கு சிங்கப்பூரில் வசிக்கும் வெங்கட்டோடு திருமணம் நடைபெறுகிறது. வெங்கட்டும் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் திருமணம் வேண்டாம் என்று மறுக்க ஒரே மகன் என்ற காரணத்தினால் திருமணம் செய்கின்றனர். ஆறு மாதங்களில் வெங்கட் இறந்து போக உமா வயிற்றில் பெண் குழந்தையுடன் சிங்கப்பூரிலிருந்து சென்னை வருகிறாள். உமாவிற்கு கருவில் பெண் குழந்தை என்று கேள்விப்பட்ட வெங்கட்டின் பெற்றோர் அவளை அவள் அம்மா வீட்டிலேயே விட்டுவிடுகின்றனர். உமாவிற்கு பெண் குழந்தை பிறக்கிறது. பெங்களூரில் வசிக்கும் வசந்த் மூலம் உமாவிற்கு வேலையும் கிடைக்கின்றது. மீண்டும் வசந்தையே மறுமணம் செய்து கொள்வதாக அமைகிறது இப்புதினம்.

புதினத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒரு கதாபாத்திரம் தன்பார்வையில் கதையை தொடர்கின்றது. வசந்த் உமா, ஷீலா குமார் வெங்கட் போன்ற கதாபாத்திரங்களின் இயலாமைகளால் புதினம் கட்டமைக்கப்பட்டுள்ளது. பெரியவர்கள் எது செய்தாலும் நல்லதுக்கு தான் என்ற நம்பிக்கையே இப் புதினம் முழுவதும் நிரம்பிக் கிடக்கின்றன.பெற்றவர்கள் பிள்ளைகள் தங்களை புரிந்து கொள்ளவில்லையே என்று வருந்துவதும், பிள்ளைகள் பெற்றவர்கள் தங்களை புரிந்து கொள்ளவில்லையே என்று வருந்துவதும் கருவாக அமைந்துள்ளது.வாழ்க்கையை வாழச் சிறந்த வழி

அதன் போக்கிலேயே வாழ்வது,வாழ்ந்து பார்க்கலாம் வா என்றதன்னம்பிக்கையைஊட்டவே வாழ்ந்து பார்க்கலாம் வா என்ற தலைப்பு தேர்வும் இப்புதினம் சிறக்க காரணங்களாகும்.

**நெய்தல்-(2008)**இப்புதினத்தின் ஒவ்வொரு அத்தியாயமும் கதையின் முக்கிய செய்தியை தலைப்பாக கொண்டுள்ளது. நெய்தல் நாயகி சுவாதி பிறந்ததும் வளர்ந்ததும் சிங்கப்பூரில் தோள்வரை வெட்டிய கூந்தலும் தன்னம்பிக்கை கொண்டவளும் இலக்கிய ஆர்வம் மிகுந்தவளாகவும் இருக்கின்றாள். ஆனாலும் இன்றைய இளைஞர்களின் ஏமாற்று வழியில் விழுவதும் சுயநலங்களை இனங்காணும்தன்மை இல்லாமல் தனக்குத்தானே சமாதானம் தேடிக் கொள்ளும் ஒரு சராசரி பெண்ணாக படைக்கப்பபட்டுள்ளாள்.பாலா,செந்தில், குமார் போன்றோரின்வாழ்க்கையில் நிகழும் ஏமாற்றங்கள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றை சிங்கப்பூர் பின்புலத்தோடு இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது.

**மனப்பிரிகை-(2008)**

கோபியும் சந்தியாவும் காதலர்கள் மதச் சடங்குகள் இல்லாமல் சட்டப்படி திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்கிறார்கள். பிரச்சனைகள் வருகின்றது, பிரிந்து போகின்றனர் என்பதே கதை. திருமணம் என்ற பந்தத்திற்குபின்னர் தான் சேர்ந்து வாழ முடியுமா? அதற்கு முன்னர் இணைந்து வாழ்வதில் என்ன தவறு? வாழ்க்கையை முழுவதும் வாழ விரும்பும் ஒருவர் தனக்கு ஏற்றவர் தானா என்று முன்னரே ஒருவரை சோதனை செய்ய வேண்டாமாசேர்ந்து வாழ்ந்து பார்த்தால் என்ன என்ற ? கேள்விகளுக்கு விடை தரும் முயற்சியில் ஈடுபடும்காதலர்களின் வாழ்வியலே இக்கதை. பல்வேறு இனங்கள் சங்கமிக்கும் சிங்கப்பூர் சமூகத்தில் வாழும் இளைஞர்களிடையே இந்த பழக்கம் தோன்றி இருப்பதைஇப்புதினம் சொல்கின்றது. சிங்கப்பூர் தமிழ் சமூகம் தமிழர் மரபுக்கும் அதி நவீனத்துவத்திற்கும் இடையில் அல்லல் படும் தன்மையை, இன்றைய நவீன வாழ்க்கை முறையில் முரண்படும் இளைய தலைமுறைகளையும் மரபு என்ற பெயரில் உலா வரும் நேற்றைய மனிதர்களின் வாழ்வியலையும் எதிர்காலத்தில் இப் பண்பாட்டு அத்துமீறல்கள் நடைபெறும் என்பதை எச்சரிப்பதைப் போல இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது.

குவியம்-(2009): அன்பின் மையத்திலிருந்து விலகிப் போன மனிதர்களின் துயரங்களை இப்புதினம் சுட்டிக்காட்டுகிறது. கணவன் மனைவி இருவரும் அன்பு என்கிற பண்பு இல்லாமல் போகும்போது ஏற்படும் பாதிப்புகளை சுவாதி மோகன், சித்ரா மணி, உமா சுந்தர், பத்மா குமார் ,தீபிகா சரவணன், சங்கீதா டேவிட் என பல குடும்பங்களை கொண்டு கதை படைக்கப்பட்டுள்ளது. காதலித்து திருமணம் செய்து கொள்ளும் சுவாதி தன் கணவனின் வருமானமும் நடத்தையும் சரியில்லாத காரணத்தினால், சட்டப்படி அவனிடமிருந்து மணவிலக்குபெறுகிறாள். இரண்டாவது மனைவிக்கு தொடர்ந்து பெண் குழந்தைகளை பிறப்பதால் முதல் மனைவியிடம் குழந்தைகளை தூக்கிக் கொடுத்து அவளிடமே வாழ்க்கையை தொடருகிறார் மற்றொரு கணவன். பெண்களின் வாழ்வு மையம் விலகிப் போக ஆண்கள் காரணமாகின்றனர், ஆனால் வாழ்வின் சவால்களை தனித்து நின்று எதிர்கொள்ள பெண்கள் எவ்விதம் உள்ளாகின்றனர் என்பதை இப்புதினம் பதிவு செய்கிறது.

**திரிதலையும் திணைகள்- (2012)**சாதாரண மத்திய தர,த்து மக்களின் கனவுகள் அதை அடையச் செய்யும் முயற்சிகளில் தோல்விகள் போன்றவற்றை இந்திய சமூகம், சிங்கப்பூர் சமூகம் என்ற இரண்டு

சமூக கட்டமைப்பில் படைக்கப்பட்டுள்ளது .இப் புதினம் தந்தையின் மனப்பிறழ்வு நோயினால் மகனின் எதிர்கால வாழ்வு பாதிக்கப்படும் என்ற குழந்தைகளின் உலகத்தையும், வயதானவர்களின் உலகம் தலைமுறையைசார்ந்து இருக்கின்ற தன்மையினையும், சிங்கப்பூர் நகரத்தின் வளர்ச்சியோடு இணைந்து நவீன வாழ்க்கையில் ஒவ்வொரு தனி மனிதனும் தனி ஒரு தணையாக திரிவதை நேர்கோட்டு உத்தி மூலம் இப் புதினம் படைக்கப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூர் நகரம், இளைஞர்களின் சுதந்திர வாழ்க்கை, வீட்டு வேலை செய்யும் பெண்களின் நிலை, புலம்பெயர்ந்த தமிழர்களின் தாய்நாடு ஏக்கம் கனவுகள் தமிழக மக்களின் வாழ்வியல் நிலை போன்றவற்றை விரிவாக பேசுகிறது இப்புதினம்.

ஜெயந்தி சங்கரின் புதினங்களின் சிங்கப்பூரில் வசிக்கின்ற தமிழர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை

1. பண்பாட்டுச் சிக்கல்கள்
2. பொருளாதார சிக்கல்கள்
3. சமூக சிக்கல்கள்

பண்பாட்டுச் சிக்கல்கள் பண்பாடு என்னும் சொல் மனிதனின் அல்லது ஒரு இனத்தின் ஒட்டுமொத்த தன்மைகளான வரலாறு, மொழி உணர்வு, பழக்கவழக்கங்கள் போன்றவற்றை குறிப்பிடுவன ஆகும். இப்பண்பாடு தமிழக சீனாமக்களால் உருவாக்கப்பட்ட கருவியாகும்.இக்கருவியே மனிதனின் அடையாளம் அடையாளம் ஆகும் .ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழர் பண்பாடு. இதை மீறும் பொழுது கூடா ஒழுக்கம் ஏற்படுகின்றது. சமுதாயத்தால் தடை செய்யப்பட்ட உறவுமுறைகளுக்கு உள்ளே உறவு மீறுதல் கூடா ஒழுக்கம். திருமணம் ஆன ஆண் பெண் இருவரும் இக் கூடாவொழுக்கத்தினை மேற்கொள்கின்றனர். கணவனின் இயலாமை ,மிகு வேட்கை, கணவன் மனைவியை விட்டு பணிக்காக வேறு நாடுகளுக்கு செல்லுதல், கணவன் மனைவி ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தாமல் போன்றவையே இக் கூடாவொழுக்கத்திற்கு காரணம்.

மனப்பிரிகை புதினத்தில்

“என்னோடு சேர்ந்து வாழ நீ தயாரா ஒரு வருடம் போனதும் பதிவு செய்வோம் யோசிக்கலாம் அப்படி என்று சொல்லிஇழுக்காமல் சட்டுன்னு பதில் சொல்லு”

சந்தியாவிடம் கோபி கேட்கும் கேள்வி இவ்விருவரும் சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த மூன்றாம் தலைமுறைதமிழர்கள். நன்கு படித்தவர்கள் திருமணம் செய்ய முடிவு செய்கின்றனர் .இருவரும் ஒரு வருடம் இணைந்து வாழ்ந்து பின் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்கின்றனர்.

அதுவும் அம்மாவை கன்வின்ஸ் பண்றதே கஷ்டம் அவர்களை பொறுத்தவரை பிள்ளைகளுக்கு திருமணம் ஒரு கால் கட்டு அதாவது ஒரு பொறுப்பை கொணரும் அமைப்பு அதைத் தாண்டி யோசிக்கிறது இல்லை, கோபி, பெற்றோர்கள் பிள்ளைகளின் நலம் கருதி திருமணம் செய்து வைக்கவில்லை என்று கூறுகிறான்.

“சடங்கு சம்பிரதாயம் தாலியோ மோதிரமோ ஏன்செலரி சர்டிபிகேட் எதுவுமே கூட அவங்க நினைக்கிறது பொறுப்பை கொண்டு வர முடியாது நம்பிக்கையும், உறவு பலத்தையும் சம்பந்தப்பட்ட இரண்டு பேர் தான் கொண்டுவர முடியும் என்று. நான் நினைக்கிறேன்”சடங்கு போன்ற பண்பாட்டு விழுமியங்கள் மீதும் இளைய தலைமுறைக்குநம்பிக்கை பொய்த்துப்

போனதையும் அறியலாம் இவர்கள் பெற்றோரிடம் சொல்ல அதிர்ச்சி அடைகின்றனர் எல்லா இடத்திலும் இப்போக்கு நடந்து கொண்டு தான் இருக்கின்றது என்று வாதிட பெற்றோர் ஏற்றுக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர் சிங்கப்பூரில் இது இன்னமும் சட்டப்படியான அங்கீகாரம் பெறவன்றது”

நானும் ஒத்துக்கிறேன் மத்தபடி நிறைய பேர் கல்யாணம் இல்லாமலேயே சந்தோசமா சேர்ந்து வாழுறாங்க தானே கேள்விப்பட்டு இருப்பீங்க இதெல்லாம் பெரிய விஷயமே இல்ல ஒரு விஷயம் தெரியுமா உங்களுக்குன்னு வரும்போது உங்களால ஏத்துக்க முடியாமல் போவதுபெரும்பாலான இந்திய குடும்பங்களிலேயே இதுதான் பிரச்சனை ஆனால் பல் கலாச்சார நாட்டுல இருக்கிற இன்றைய மிகவும் முற்போக்கான சிந்தனை கொண்டவங்க யோசிக்கிறவங்க தெளிவா இருக்காங்க”என்று இளைய தலைமுறையின் சிந்தனை போக்கினை ஆசிரியர் கூறுகிறார்.

சேர்ந்து வாழும் கோவியும் சந்தியாவும் ஒரு கட்டத்தில் பிரிகின்றனர்.இத்தகைய பண்பாட்டு அத்துமீறல்கள் எதிர்காலத்தில் பகுத்தறியப்படாத பண்பாக பின்பற்றக்கூடிய காலம் வந்துவிடும் என்றே சொல்லலாம் பல பெற்றோர்கள் தம் பிள்ளைகளை குழந்தைகளாகவே பார்க்கின்றனர். வயதுக்கு ஏற்பவும் பிள்ளைகளின் எண்ணத்திற்கு ஏற்பவும் பெற்றோரும் தன் எண்ணங்களை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் அவர்களோடு முரண்பாடுகளே தோன்றும் எனலாம்.

குடும்பச் சிக்கல்கள். குவியம் புதினத்தில் சுவாதி மோகன் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள். திருமணத்தின் போது மோகன் தான் செய்த வேலையை விட்டுவிட்டு வேறு வேலையை தேடுகின்றான். வேலை தேடும் நோக்கமும் இரண்டாம் பட்சம் குடிப்பதற்கு அடிமையானவன் யாரிடமாவது கடன் கேட்டோ தாய் வீட்டில் பொருளினை பெற்றோ குடித்துவிட்டு வந்ததால்சுவாதியின் குழந்தை அபிநயாவின் மருத்துவச் செலவிற்கு வழியில்லாமல்சிங்கப்பூருக்கு தனியாக பணிக்கு செல்கிறாள். சிங்கப்பூரில் இருக்கும் சுவாதிக்கு மேன்மேலும் துன்பம் தருகிறான். மோகன் இறுதியாக ஜீவனாம்சம் கொடுத்துவிட்டு மனவிலக்கு பெற சம்மதம் தெரிவிக்கிறான் மோகன் குடிப்பழக்கம் சந்தேகப்படல் இவையெல்லாம் கணவன் மனைவியிடம் சிக்கலை ஏற்படுத்துகின்றது எனலாம்.

,”நாம பிரியனும்னா ஒரே ஒரு கண்டிஷன் நீ உங்க அம்மாவுக்கு அனுப்புற அதே தொகையை எனக்கும் மாசம் அனுப்பி வை”

என்றவனின் பார்வையில் இறைதேடும் விலங்கின் சாயல் லேசாக தெரிகிறது. மாதாமாதம் மனைவியிடம் பணம் வாங்குவதற்காக மனைவிக்கு மணவிலக்கு வழங்க சம்மதிக்கின்றான் குழந்தைக்கு உடல்நிலை சரி இல்லாத போது கூட குடிப்பழக்கத்தை நிறுத்தாமல் இருப்பதால் இருவரிடையே உறவில் சிக்கல் ஏற்பட்டது எனலாம்

விதவை நிலை சமுதாயத்தில் பெண்கள் தாழ்ந்த நிலைக்கு நடத்த பட்டதின் அடையாளமாக விதவை நிலையினை கொள்ளலாம் இவர்களின் வாழ்வு மறுக்கப்பட்டுதுயர வாழ்வாக கழிந்துள்ளது நெய்தல் புதினத்தில் ஏற்கனவே தலையில் கட்டி இருந்து குணமானவன் திருமணம் வேண்டாம் என்று தடுத்தும் பெற்றோர்கள் திருமணம் செய்து வைக்கின்றனர் திருமணமான ஆறே மாதத்தில் மறுபடியும் கட்டி வந்து இறந்தும் போகின்றான் குழந்தையுடன் இருக்கும் உமாவை மாமியார்

“எம் பிள்ளைக்கு குணமாய் இருந்தது இவ வந்த வேலை தான் அவனுக்கு மறுபடியும்”

என்று குற்றம் சாட்டுகிறார் சிங்கப்பூரில் வசித்தாலும் முதல் தலைமுறை பெண்களின் மனப்போக்கு இன்றும் மாறாமல் தான் உள்ளது ஆனால் உமாவின் தந்தையோ அவளுக்கு இரண்டாவது

திருமணம் செய்து வைக்கிறார்

“உமாவ பண்ணிக்க அவாளுக்கு முழுச் சம்மதம் நல்ல மனுஷாலாஇருக்கா ஒரே ஒரு கண்டிஷன்தான்டா சொல்றா குழந்தையை மட்டும் நானும் அகிலாவும் இங்க வச்சு வளர்த்துக்கணும்”

உமாவை இரண்டாவது திருமணம் செய்து கொள்ள மாப்பிள்ளை வீட்டார் சம்மதம் சொல்லிவிட்டாலும் அவளின் குழந்தையை ஏற்றுக் கொள்ளும் மனம் இக்கால மனிதர்களுக்கு இல்லாமல் போனது சமூக அவலம்எனலாம்.

உமா தன் பெற்றோரிடம் கோபித்துக் கொண்டு அவுன்ஸ் மாமா வீட்டிற்கு தங்கி இருக்க செல்கிறாள் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அந்த தெருவில் உள்ள ரவுடி ஒருவன் உமாவிடம் தவறாக நடக்க முயற்சிக்கிறான்” கதவைத்தொரம்மெரொம்ப ஃபிலிம் காட்டாத ஐயர் குழந்தை தான் உனக்கு ரொம்ப பிடிக்குமோ? என்று வெளியில் நின்று கண்ணா பின்னாவென்று கத்திக் கொண்டே இருந்தானாம்”

பெண்கள் படித்து வேலைக்குச் சென்று தன் சுயத்தை காக்க முயற்சி செய்தாலும் இன்றைய சமூகம் விதவைப் பெண்களை அடக்கியும் ஆசைகளை துறக்கவும் கட்டாயப்படுத்துவது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

**தொழிலாளர் நிலை**

அயல்நாடுகளுக்கு வேலையின் நிமித்தமாக புலம்பெயர்ந்து செல்வது சங்க காலம் தொட்டே ஏற்பட்ட நிகழ்வாகும் வறுமையினாலும் கடன் சுமைகளாலும் நாடு விட்டு நாடு செல்லும் தொழிலாளர்கள் அங்கு சொல்லவொண்ணாதுயரத்தை அடைந்து வருகின்றனர்.

கணவனின் பொறுப்பற்ற தன்மையினால் சிங்கப்பூருக்கு வேலைக்கு செல்லும் சந்தியா சந்திக்கும் சிக்கல்களை குவியம் கதையில் ஜெயந்தி சங்கர் காட்சிப்படுத்துகின்றார் மோகன் மட்டும் ஒரு வேலயில்இருந்திருந்தால் சென்னையிலேயே குழந்தைகளுடன் நிம்மதியாக இருந்திருக்கலாம் இப்படி கடல் கடந்து வந்து சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தான் என்ன?

“அபிநயாவின் சிகிச்சை செலவை சரி கட்ட முடியாமல் போனதில் வேறு வழியில்லாமல் வரவேண்டியதாயிற்று”

என்பதை சந்தியாவின் மன ஓட்டத்தின் வழி அறிய முடிகிறது.

**தொகுப்புரை:**

அயல்நாடுகளில் வசிக்கின்ற தமிழர்கள் எதிர் கொள்ளும் சிக்கல்களை ஜெயந்தி சங்கர் பன்னாட்டு சிக்கல்களையும் சமூக சிக்கல்களையும்தம்புதினங்களில்மேற்கண்டவாறுபதிவுசெய்துள்ளார் எனலாம்.

ஜெயந்திசங்கர்-நாவல்கள்முதல்பதிப்பு 2014,காவ்யா பதிப்பகம்சென்னை.